# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவு தொடராது! பொதுஜன பெரமுனவின் எண்ணத்தில் என்றும் மஹிந்ததான்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன உறுதி



2024 ஆம் ஆண்டுவரை மட்டும்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்படும், என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாம் இந்த அரசாங்கத்தை அமைத்திருந்தாலும் இது தற்காலிக அரசாங்கமொன்றுதான். 2024 ஆம் ஆண்டுவரை மட்டும்தான் இந்த அரசாங்கம் இருக்கும்.

இதன் பின்னர் இவரைக் கொண்டுவருவோம், அவரைக் கொண்டுவருவோம் என நாம் எந்த இடத்திலும் கூறவில்லை. ஆனால், இந்த அரசாங்கத்தை நடுவில் உடைத்து முட்டாள் தனமான வேலையைச் செய்யவும் நாம் தயாரில்லை.

ஜனாதிபதிக்கோ அமைச்சரவைக்கோ நாட்டை வழிநடத்த முடியாவிட்டால், உடனடியாகத் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் காட்டுச் சட்டம் வந்துவிடும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எண்ணத்தில் என்றும் மஹிந்த ராஜபக்சதான் இருக்கிறார். மக்கள்தான் அரசாங்கத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அரசாங்கம் நாட்டு மக்களைத் துன்பத்திற்குள் தள்ளியுள்ளது. மக்கள் இறந்து போன பின்னர் ஐ.எம்.எப்.இன் கடனுதவி கிடைத்தும் பலனில்லாமல் போய்விடும்.

எனவே, அரசாங்கம் இதுதொடர்பாகவும் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 09 வியாழக்கிழமை 26.10.2023 கதிர் 100



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## விடுவிக்கப்பட்ட காணிகளை உரிமை கோரிய பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள்

### மாங்கொல்லை மக்கள் மத்தியில் குழப்பம்



யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை மாங்கொல்லைப் பகுதியில் அண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட தனியார் காணிகள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானவை என அதிகாரிகள் உரிமை கோரி வந்தமையால், காணி உரிமையாளர்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டது.

அது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 33 வருட காலத்திற்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மாங்கொல்லைப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியதை அடுத்து, அப்பகுதி மக்கள் தமது காணிகளை அடையாளப்படுத்தி எல்லைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளனர்.

2▶

## தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானம்

நவம்பர், முதல் வாரத்திலிருந்து தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் வைத்திய அதிகாரிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையை

2▶

## வீதி விபத்துகளில் உயிரிழக்கின்ற மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 150 பாடசாலை மாணவர்கள் வீதி விபத்துகளில் உயிரிழப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்துப் பொலிஸாரின் தரவுகளின்படி, நெடுஞ்சாலைகளில் ஏற்படும் வாகன விபத்துகளில் தினமும் 6 பேர் உயிரிழப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு 4 மணியத்தியாலங்களுக்கும் ஒருவர் உயிரிழப்பதாகக் கூறப்படுகிறது.

கவனக்குறைவாக வாகனம் செலுத்துவதானாலேயே இந்த விபத்துகள் அதிகம் ஏற்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2▶

## பொலிசாரால் செயல்படுத்த முடியாவிட்டால் அதிகாரத்தினை மாகாணத்திடம் தாருங்கள்

### ஒருங்கிணைப்புக் குழுவில் சிறீதரன் எம்.பி.



யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலிஸாரின் செயற்பாடு மந்தகதியில் இடம்பெறுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

இன்று இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பேசிய அவர், சட்டவிரோத மணல் கடத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார், இராணுவத்தின் உதவியை நடுவதாக அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினை யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக நிலை நிறுத்த அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்களா? என்று அவர் கேள்வியெழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை ஒழுங்காகச் செயற்படுத்த முடியாவிட்டால் பொலிஸ் அதிகாரத்தினை மாகாணத்துக்குத் தாருங்கள், எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சட்டவிரோதச் செயற்பாடுகளை

2▶

## சட்டத்தரணிகளுக்கு உயிர் அச்சுறுத்தல்! சங்கத்தின் தலைவர் கௌசல்ய கவலை

கடமைகளை நிறைவேற்றும் போது சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கவலை வெளியிட்டுள்ளது.

உயிருக்கு அஞ்சாமல் தமது தொழில்சார் கடமைகளை நிறைவேற்றும் சுதந்திரம் சட்டத்தரணிகளுக்கு இருக்க வேண்டும் என அதன் தலைவர் கௌசல்ய நவரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி கலகெதர

2▶

## இலங்கைக்குக் கடன் வழங்கிய அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என வலியுறுத்தல்!

### அமெரிக்கத் தூதுவர் டுவிட்டரில் தகவல்



கடன் வழங்கிய அனைவரையும் இலங்கை சமமாக நடத்தவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுடன்

2▶

## கொழும்புத் துறைமுகத்தில் தென்கொரியப் போர்க் கப்பல்!



தென்கொரிய கடற்படைக்கு சொந்தமான ‘Gwang-gaeto the Great’என்ற போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பலானது இந்தியா - பசிபிக் மூலோபாயத்தின் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக தென் கொரிய கடற்படை குறிப்பிட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை குறித்த கப்பல் வந்தடைந்துள்ளதோடு அதனை வரவேற்கும் நிகழ்வில் இலங்கைக்கான கொரியத் தூதுவர் மற்றும் பலர் கலந்துகொண்டிருந்தனர். (04)

## போதியளவு உரம் கையிருப்பில் அமைச்சர் மஹிந்த தெரிவிப்பு

பெரும்போக நெற் செய்கைக்குத் தேவையானளவு உரம் கையிருப்பில் உள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேவையான பிரதேசங்களுக்குக் களஞ்சியசாலைகளில் இருந்து உரம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவிற்கான நிதியும் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, உரத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகும் செய்திகள் பொய்யானவை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தனியாரிடமும் போதியளவான உரம் காணப்படும் நிலையில், விவசாய நடவடிக்கைகள் முழுமையாக ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக உர விற்பனை குறைவாகக்காணப்படுவதாகவும்அமைச்சர்கூறியுள்ளார்.

இந்நிலையில், ஏதேனும் பிரச்சினை அல்லது அதிகாரிகள் மட்டத்தில் தவறுகள் காணப்படும் பட்சத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (04)

## பொலிசாரால் செயல்படுத்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆராயும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிசாரால் சிவில் நிர்வாகத்தினைத் திறமையாக செயல்படுத்த முடியவில்லை எனக் கருதினால் பொலிஸ் அதிகாரத்தினை மாகாணத்திடம் தாருங்கள்.

முன்னாள் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா கூட நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கையினை முன்வைத்து வருகின்றார்.

பொலிசாரால் சிவில் நிர்வாகத்தினைக் கட்டுப்படுத்தி செயற்படுத்த முடியாவிட்டால் அதனை எங்களிடம் தாருங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த யாழ்ப்பாணப் பிரிவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், உயிரைப் பணயம் வைத்துத்தான் பொலிஸார் கடமையில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டார்.

ஆளணிப் பற்றாக்குறை போன்ற பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் கடமையாற்றி வருவதால் நாடாளுமன்ற உறுப்பினரின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்திருந்தார். (04)

## இலங்கைக்குக் கடன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தாக அமெரிக்கத் தூதுவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஊழியர் மட்ட உடன்படிக்கையை எட்டியதன் மூலம், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெறுவதற்கான முயற்சியில் முன்னேற்றம் கண்டுள்ளமைக்கு அவர் வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டின் போது சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தரப்பினரிடமிருந்தும் வெளிப்படைத்தன்மை அவசியம் என்றும் அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார்.

இலங்கையில் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதிசெய்து, நியாயம்-வெளிப்படைதன்மை ஒருமைப்பாடு - ஆகியவற்றை மதிக்கும் ஒரு பொருளாதாரச் சூழல் குறித்து அமெரிக்கா உறுதியுடன் இருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் தெரிவித்துள்ளார். (க)

## சட்டத்தரணிகளுக்கு உயிர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதவான் நீதிமன்றில் சந்தேகநபர் ஒருவரால் பெண் சட்டத்தரணி ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பல சட்டத்தரணிகள் முன்னிலையாகி குறித்த பெண் சட்டத்தரணிக்கு நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்த உதவியதாக அவர் குறிப்பிட்டார்.

சட்டத்தரணிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இன்றியமையாத ஒன்று எனவும் நீதிமன்றத்தின் கண்ணியமும் அதிகாரமும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார். (க)

## வீதி விபத்துகளில் உயிரிழக்கின்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இந்த ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் தேதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் 1,800 பேர் உயிரிழந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் 18 வயதுக்குட்பட்ட 115 சிறுவர்களும் உயிரிழந்துள்ளதாகப் போக்குவரத்து பொலிஸாரின் தரவுகள் தெரிவிக்கின்றன. (04)

## தொடர் தொழிற்சங்கப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

அதற்கிணங்க, எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் விஜபி சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடமாடும் அம்புலன்ஸ் சேவைகளில் இருந்தும், மருத்துவமனைக் கடமைகளுக்கு வெளியே திட்டமிடப்பட்ட நடமாடும் கிளினிக்குகள் உட்பட தொடர்புடைய பிற கடமை நடவடிக்கைகளில் இருந்தும் மறு அறிவிப்பு வரும் வரை விலக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதேநேரம், முன்மொழியப்பட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் போதிய பதிலைக் கொடுக்காததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நவம்பர் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் மாகாண அளவிலான தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (04)

## விடுவிக்கப்பட்ட காணிகளை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்நிலையில், இன்றைய தினம் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சிலர் அப்பகுதிக்கு வந்து, இந்தக் காணிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரியவை. நாம் கடந்த 40 வருட காலத்திற்கு முன்பே காணி உரிமையாளர்களிடம் இருந்து காணிகளைக் கொள்வனவு செய்து கொண்டுவிட்டோம், எனக் கூறி தனியாரின் காணிகளைத் தமது காணிகள் எனச் சொந்தம் கொண்டாடியுள்ளனர்.

காணியை நாம் யாருக்கும் விற்கவில்லை. இவை எங்களின் காணிகள். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானவை எமது காணிகளில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள காணிகளே எனக் காணி உரிமையாளர்கள் கூறியிருந்தனர்.

அதனை ஏற்க மறுத்த அதிகாரிகள், இந்தக் காணிகளையும் தமது நிறுவனம் கொள்வனவு செய்து விட்டதாகக் கூறினர். இது உங்கள் காணிதான் என்பதற்கு எங்களுக்கு ஆவணங்களைக் காண்பித்து உறுதிப்படுத்துங்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

அதற்குக் காணி உரிமையாளர்கள் நாங்கள் எதற்கு உங்களுக்கு உறுதியைக் காண்பிக்க வேண்டும்? உங்களின் உறுதிகளைப் பரிசீலித்து, உங்கள் காணி எங்கே இருக்கிறது என்பதனை உறுதிப்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு எனப் பதிலளித்துள்ளனர்.

அதனையடுத்து, இந்தக் காணிகளையும் கொள்வனவு செய்து விட்டோம். அதற்கான உறுதிகள் எங்களிடம் உள்ளன. ஆதாரங்களுடன் வருகிறோம், என பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் எனத் தம்மைத் தெரிவித்துக் கொண்டவர்கள் அங்கிருந்து சென்றனர்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர் தங்குமிடம் இருந்த பகுதிக்கு அருகில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி இருந்தது. அந்தக் காணி எமது காணிகளில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ளது.

ஆனால், நாங்கள் தற்போது துப்புரவு செய்து அறிக்கைப்படுத்தும் காணிகள் எமது சொந்த காணிகளே. அந்த காணிகளை நாம் எந்தக் காலத்திலும் எவருக்கும் விற்கவில்லை.

அதிகாரிகள் காணி இடத்தினை மாறி விளங்கிக்கொண்டு வந்து எம்முடன் கதைத்தார்களா? அல்லது 33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் எமது காணி அகப்பட்டு இருந்த காலப்பகுதியில் எமது காணிகளை மோசடியாக அபகரித்து விட்டார்களா? எனும் சந்தேகம் எமக்குத் தற்போது ஏற்பட்டுள்ளது.

தாம் காணிகளைக் கொள்வனவு செய்த ஆதாரத்துடன் வருகிறோம், என அதிகாரிகள் கூறிச் சென்றுள்ளனர். இனி அவர்கள் வந்தாலே எமக்கு உண்மை நிலை தெரிய வரும், என அக்காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர். (01)




விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்



## அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியில் பாலியல் சவால்கள் – விழிப்புணர்வு நிகழ்ச்சி!

(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில், புதிதாய் இணைந்து கொண்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்காக, கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திசைமுகப்படுத்தும் தொடர்நிகழ்ச்சியில், ஒரு நிகழ்ச்சியாக இளைஞர்கள் எதிர்நோக்கும் பாலியல் சவால்கள், எனும் தலைப்பிலான விழிப்புணர்வூட்டல் இன்று கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் கலந்துகொண்டு மாணவர்களுக்குச் சிறப்புரை நிகழ்த்தினார்.

மேலும், கல்முனைப் பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிமனை பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என்.எம்.தில்ஷான் கலந்துகொண்டு இளைஞர்கள் எதிர்நோக்கும் பாலியல் சவால்கள் தொடர்பில் சிறப்பு விரிவுரை நடத்தினார்.

## அம்பாறை மாவட்ட பெண்கள் வலுவூட்டல் கற்கைநெறிக்கான சான்றிதழ் வழங்கல்



(காரைதீவுச் செய்தியாளர்)

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு கடந்த மூன்று மாத காலமாக நடத்திய பெண்கள் வலுவூட்டல் சார்ந்த சான்றிதழ் கற்கைநெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காரைதீவில் நடைபெற்றது.

வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், கௌரவ அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் டி.ஜே. அதிசயராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கௌரவ அதிதிகளாகவும், வளவாளர்களாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ.அசீஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, மாவட்ட இணைப்பாளர் இர்பான், உளவளத்துறை உத்தியோகத்தர் ரி.சுதர்சன், இணைப்பாளர் மொகமட் ஷா உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

பயிற்சிநெறியை மேற்கொண்ட 40 மாணவிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு, பிரதம அதிதியும் வளவாளர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

## மகிழ்ச்சியான குடும்பத்துக்கான உளவளத்துணை அறிவூட்டல்





(எம்.எப்.நவாஸ்)

அட்டாளச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபீரின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள், சமுதாய அடிப்படைச் சங்க நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான சமகால குடும்பச் சீர்கேடு சம்பந்தமான அறிவூட்டல் மற்றும் உளவளத்துணை தொடர்பான அறிவுரை நிகழ்வு, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமிட் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று இடம்பெற்றது.

இதன்போது, வளவாளராகப் பங்கேற்ற சிரேஷ்ட உளவள ஆலோசகர் மௌலவி அப்துல் ஹமீட் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் கே.வி.சலீம் முகாமையாளர்களான ரீ. பரமானந்தம், ஐ.யூ. நபீசா, விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோதர் ஏ.எஸ்.எம். உனைஸ், வலய உதவி முகாமையாளர் அஷ்ரப் அலி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சர்ஜானா எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## விநாயகபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் புதிய ஆலய அடிக்கல் நாட்டல்

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள விநாயகபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கான புதிய ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஜெயராஜ், திருக்கோவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி என்.நிசாந்தினி மற்றும் ஆலய தர்மகத்தாக்கள், பொது மக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.







## கனடாவில் குறிப்பிட்ட விசா சேவைகளை இந்தியா இன்று மீண்டும் ஆரம்பித்தது!

கனடாவில் குறிப்பிட்ட விசா சேவைகளை இந்தியா மீண்டும் தொடங்கியிருப்பதாக இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காலிஸ்தான் பிரிவினைவதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் இந்தியா – கனடா நாடுகளுக்கு இடையேயான உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

நிஜ்ஜார் கடந்த ஜூன் 18 ஆம் திகதி கனடாவில் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். நிஜ்ஜார் கொலையில் இந்திய உளவு அமைப்புக்கு தொடர்பு உள்ளது என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அந்நாட்டு நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார். அதனைத் தொடர்ந்து, அந்நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மூத்த அதிகாரியை நாட்டை விட்டு வெளியேறுமாறும் கனடா உத்தரவிட்டது.

இதற்குப் பதிலடியாக, இந்தியாவிலுள்ள கனடா தூதரக உயர் அதிகாரியை இந்தியா வெளியேற்றியது. மேலும், கனடாவின் குற்றச்சாட்டுக்குக் கடும் கண்டனம் தெரிவித்த இந்தியா, ட்ரூடோவின் குற்றச்சாட்டையும் மறுத்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், கனடாவிலிருந்து இந்தியா வருபவர்களுக்கான அனைத்து வகை விசா வழங்குவதை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியது. அத்தோடு, இந்தியாவிலுள்ள கனடா தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறும் கனடாவை இந்தியா கேட்டுக்கொண்டது. தொடர்ந்து இரு நாடுகளிடையேயான உறவு கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இந்தச் சூழலில், கனடாவில் குறிப்பிட்ட விசா சேவையை இந்தியா மீண்டும் தொடங்கியுள்ளது.

கனடாவில் இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கான பாதுகாப்பில் முன்னேற்றம் காணப்படும் நிலையில், கனடாவைச் சேர்ந்தவர்களுக்கான விசா சேவைகள் மீண்டும் தொடங்கப்படும், என்று இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்த நிலையில், விசா சேவை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கனடாவுக்கான இந்திய தூதர் தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்ட பதிவில், கனடாவிலிருந்து இந்தியா வருபவர்களுக்கான விசா, வர்த்தக விசா, மருத்துவ விசா, மாநாடு விசா உள்ளிட்ட சேவைகள் வியாழக்கிழமை முதல் தொடங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (04)

## ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்!



ஆப்கானிஸ்தானில் ஒரே மாதத்தில் நான்காவது முறையாக மீண்டும் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவு கோலில் 4.3 ஆகப் பதிவாகியுள்ளது என்று ஆப்கன் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இன்று அதிகாலை 1.09 க்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 4.3 ஆகப் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் 150 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என ஆப்கன் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் ஏற்பட்ட சேதங்கள், உயிரிழப்புகள் குறித்த எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவல்லை.

உள்நாட்டு யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தேசமான ஆப்கானிஸ்தானை அடுத்தடுத்து தாக்கும் நான்காவது நிலநடுக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹெராத் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 4,000 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இதன்போது ஹெராட்டில் உள்ள 20 கிராமங்களில், 1,983 குடியிருப்பு வீடுகள் அழிந்ததாகவும் தலிபான் தலைமையிலான பேரிடர் மேலாண் அமைச்சகம் தெரிவித்திருந்தது.

இதைத் தொடர்ந்து, ஒக்டோபர் 11 ஆம் திகதி ரிச்டர் அளவுகோலில் 6.1 அளவில் மற்றொரு நிலநடுக்கம் நாட்டையே உலுக்கியது. ஒக்டோபர் 15 ஆம் திகதி அதேபகுதியில் ரிச்டர் அளவுகோலில் 5.4 அளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான வீடுகள், பாடசாலைகள் உள்ளிட்டவை இடிந்து விழுந்தன.

ஆப்கானிஸ்தானில் இன்று அதே பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. ஹெராத் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் சேதங்கள் குறித்த விவரங்களை தலிபான்கள் இதுவரை வெளியிடவில்லை. (04)

## தரைவழித் தாக்குதலை ஒத்திவைக்க ஒப்புதல் அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்றது இஸ்ரேல்



காஸாவுக்குள் தரைவழியாக நுழைந்து தாக்குதல் நடத்தும் திட்டத்தை ஒத்திவைக்க இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளது.

மேற்கு ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்க ராணுவ நிலைகளை வான்வழித் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் வரை காஸாவுக்குள் படையினரை அனுப்ப வேண்டாம், என்று அந்த நாடு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து இஸ்ரேல் இந்த முடிவை எடுத்துள்ளது.

இது குறித்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அதிகாரிகளை மேற்கோள் காட்டி ‘த வோல் ஸ்ட்ரீட் ஜேனல்’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக், சிரியா, குவைத், ஜோர்டான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய மேற்கு ஆசிய நாடுகளில் அமெரிக்க ராணுவ நிலைகள் அமைந்துள்ளன. அங்கு ஏராளமான அமெரிக்க ராணுவத்தினர் உள்ளனர். இந்த நிலையில், காஸா பகுதியில் இஸ்ரேல் தரைவழித் தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்னதாக, அந்தப் பிராந்தியத்திலுள்ள தனது இராணுவ நிலைகளுக்கு வான் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

காஸா தரைவழித் தாக்குதலின் எதிரொலியாக மேற்காசியாவிலுள்ள தங்கள் ராணுவ நிலைகளின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டால், அந்த ஏவுகணைகளை இடைமறித்து அழிப்பதற்கான இராணுவத் தளபாடங்களை அந்தப் பிராந்தியத்தில் நிறுவ அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அந்தப் பணிகள் நிறைவடையும் வரை காஸாவில் தரைவழித் தாக்குதலை நிறுத்திவைக்க வேண்டும் என்று இஸ்ரேலை அமெரிக்கா கேட்டுக்கொண்டது. அதற்கு இஸ்ரேலும் ஒப்புக்கொண்டுள்ளது.

இஸ்ரேலின் இந்த முடிவுக்கு அமெரிக்காவின் கோரிக்கை மட்டும் காரணமில்லை. காஸாவிலுள்ள பொதுமக்களுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்வதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள், ஹமாஸ் அமைப்பினரால் கடத்திச் செல்லப்பட்ட பிணைக் கைதிகளை விடுவிப்பதற்காக ராஜீய ரீதியில் நடைபெற்று வரும் முயற்சிகள் ஆகியவையும் தரைவழித் தாக்குதலை தற்போதைக்கு நிறுத்திவைக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளதற்கான காரணங்கள் ஆகும் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## காஸா பகுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6,500 ஐக் கடந்துள்ளது



காஸா பகுதியில் கடந்த 7ஆம் திகதி முதல் இஸ்ரேல் படையினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 6,500 ஐக் கடந்துள்ளதாக அந்தப் பகுதி சுகாதாரத்துறை அமைச்சகம் புதன் கிழமை அறிவித்துள்ளது.

இது குறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸாவில் இஸ்ரேல் கடந்த 19 நாள்களாக நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6,546 ஆக அதிகரித்துள்ளது. இதில், 2,704 பேர் சிறுவர்கள் ஆவர்.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் இஸ்ரேல் தாக்குதலில் 344 சிறுவர்கள் உள்பட 756 பேர் உயிரிழந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (04)



## அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பினர் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கள விஜயம்

( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்குப் பல்வேறு வழிகளில் உதவிக்கரம் நீட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பினுடைய பிரதிநிதியான முரளி இராமலிங்கம் மற்றும் அமைப்பின் குழு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கள விஜயம் மெற்கொண்டனர்.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் அவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் இவர்களது உதவி பெறப்பட்ட பிரிவுகள் காண்பிக்கப்பட்டு, அப்பிரிவுகளின் முன்னேற்றம் பற்றிய விளக்கமும் அளிக்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்வில் வைத்தியசாலையின் தாதிய பரிபாலகர், நிர்வாக உத்தியோகத்தர், மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

## கல்முனை மாநகர பட்ஜெட்டுக்கு கல்முனையன்ஸ் போரத்தினால் முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு



(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு கல்முனையன்ஸ் போரம் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது.

அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் முபாரிஸ் எம்.ஹனிபா தலைமையிலான குழுவினர் நேற்று புதன்கிழமை பிற்பகல், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியிடம் இதனைக் கையளித்துள்ளனர்.

இந்நிகழ்வில் மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸியும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது குறித்த முன்மொழிவுகளை மாநகர சபையின் பட்ஜெட்டில் உள்வாங்கி, நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி ஆணையாளரிடம் வலியுறுத்தப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளிடம் முன்மொழிவுகளை கோரியமைக்காக கல்முனையன்ஸ் போரம் செயற்பாட்டாளர்களினால் ஆணையாளருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப் பட்டது.

அத்துடன் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களிடையே செயற்றிறன் தரப்படுத்தலில் கல்முனை மாநகர சபை முதலாம் படிநிலைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாகவும் அதற்காக ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு கல்முனை மக்கள் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.




## அலுவலக நடைமுறைகள் மற்றும் தாபன விதிக்கோவைகள் தொடர்பான செயலமர்வு



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான அலுவலக நடைமுறைகள் மற்றும் தாபன விதிக்கோவைகள் தொடர்பான செயலமர்வொன்று பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (25) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த செயலமர்வில் பதிவாளர் கிளை மூலமாக மேற்கொள்ளப்படும் கடமைகள், தாபன விதிக்கோவை தொடர்பாகவும் முஸ்லிம் விவாக சட்டம், பிறப்பு, இறப்புப் பதிவுகள், திருமணப் பதிவுகள் உள்ளிட்ட தாபன விதிக்கோவை மூலமான நடை முறைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கு வளவாளராக மேலதிக மாவட்ட பதிவாளர் அஸ்வர் கலந்து கொண்டார்.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர உட்பட சக உத்தியோகத்தர்களும் பங்கெடுத்திருந்தனர்.

## இலவச சேவைகளுக்கான வாகனங்கள் கையளிப்பு



(எம்.எப்.நவாஸ்)

மரண மற்றும் அவசர இலவச சேவைகளுக்கான வாகனங்கள் கையளிப்பு நிகழ்வு நேற்று அக்கரைப்பற்று தக்வா ஜும்மா பள்ளிவாசல் வளாகத்தில் தலைவர் எம்.எம்.எம்.ரியாத் தலைமையில் நடைபெற்றது.

மேல்மாகாண மரண சேவைக்காகவும் அக்கரைப்பற்றைத் தளமாகக் கொண்ட சேவைக்குமென 15 மில்லியன் பெறுமதியான இரண்டு வாகனங்கள் தக்வா ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

ஜெயெம்.சியாப் (ஸலபி) யின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக அக்கரைப்பற்று உலமா சபை தலைவர் எம்.ஐ.சித்தீக் ஆபிழ், பிரதம அதிதியாக பிரதேச செயலாளர், கௌரவ அதிதியாக மாநகர சபை ஆணையாளர், விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று வைத்திய அத்தியட்சகர், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர், உலமாக்கள், அரச உத்தியோகத்தர்கள், தொழிலதிபர்கள், சட்டத்தரணிகள், சமூக அமைப்புக்களின் தலைவர்கள், கழகங்களின் உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஜனாஸா குழுவின் பொறுப்பாளரும் சமுர்த்தி முகாமையாளருமான என்.ரீ.மசூரிடமும் தேசிய மரண உபகார இணைப்பாளரும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பொலன்னறுவை மாவட்ட பணிப்பாளருமான ஓய்வு பெற்ற அதிபர் எம்.எஸ்.எம்.அப்துல் காதரிடமும் வாகனத் திறப்புக்கள் கையளிக்கப்பட்டன.

# இன முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் சுமண ரத்ன தேரரால் பதற்றம்!



மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதயபுரம் பகுதியில் நேற்று மாலை அம்பிட்டிய சுமனரத்ன தேரர் மேற்கொண்ட செயற்பாடுகள் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

இருதயபுரம் கிழக்குப் பகுதியில் உள்ள சிங்கள மயானத்தில் வீடு உடைத்த கழிவுப்பொருட்கள் போடப்பட்டிருந்த நிலையில், அங்குவந்த அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் அதற்கு எதிராக கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

இதன்போது அப்பகுதிக்கு வந்த பொலிஸார் அவரைச் சமாதானப்படுத்தி அங்கிருந்து செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த பகுதியில் இரண்டு தினங்களுக்கு முன்பாக கட்டிட இடிபாடுகள் கொட்டப்பட்ட நிலையில், அவற்றினை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையினை எடுப்பதாக மாநகரசபை ஆணையாளர், சுமனரத்ன தேரரிடம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்ததாகவும் எனினும் அவர் நேற்று அங்கு சென்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

குறித்த கட்டிட இடிபாடுகளை அகற்றி அப்பகுதியைத் தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இரண்டு முச்சக்கர வண்டிகளில் வந்த அம்பிட்டிய சுமனரத்ன தேரரும் அவருடைய சகாக்களும் அங்கிருந்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில், அனைத்துத் தமிழர்களையும் வெட்டுவேன்! - என்று தெரிவித்ததுடன் இனமுரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் மேலும் பல கருத்துகளை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## உடுப்பிட்டியில் சட்டவிரோத மதுபானச் சாலை நடவடிக்கை எடுக்க அங்கஜன் எம்.பி. கோரிக்கை




உடுப்பிட்டி பகுதியில் சட்டவிரோத மதுபானசாலை ஒன்று இயங்கி வருவதாகவும் அந்த மதுபானசாலை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே இந்த விடயம் அவரால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

உடுப்பிட்டி மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள ஒரு வீடு ஒன்றில் சட்டவிரோதமான மதுபான சாலை ஒன்று இயங்கி வருகின்றது. அதாவது, அங்கு செல்வோர் பெல் அழித்து உள்ளே சென்று மதுபானத்தை கொள்வனவு செய்ய முடியும்.

எனவே, இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். (O1)

## யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது





யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம். சாள்ஸ் ஆகியோரின் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

இதன் போது கல்வி, சுகாதாரம், கால்நடை, விவசாயம், கமநல சேவைகள், போக்குவரத்து, காணி, நீர்வழங்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

அதேபோன்று பொலிஸ் அதிகாரிகள், அரச திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (O1)

## பயிர்ச்செய்கைக் காலத்தில் எலிக்காய்ச்சல் மாத்திரைகளை உட்கொள்ளுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

மழைக்காலத்தின் பின்னர் பெரும்போகப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கும் விவசாயிகள், எலிக்காய்ச்சலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள எலிக் காய்ச்சல் மாத்திரைகளை உட்கொள்ளுமாறு கஹறத்துடுவ சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் தனுக பத்மராஜ அறிவுறுத்தியுள்ளார்.

கஹறதுடுவையிலும், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் இருந்து இந்த மருந்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட நெல் அறுவடைக்குப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள், பயிரிடலைத் தொடங்கும் முதல் நாளிலேயே உணவுக்குப் பின்னர் இரண்டு Doxcycyline 100 mg மாத்திரைகளை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுள்ளனர்.

மேலும், பயிர்ச்செய்கை ஆரம்பித்து ஒவ்வொரு நாளும் 2 மாத்திரைகளை உட்கொள்ளுமாறும், பயிர்ச்செய்கை முடிவடைந்த பின்னரும் ஒரு வாரம் கடக்கும் வரை இந்த மருந்தை பயன்படுத்துமாறும் மருத்துவர் தனுக பத்மராஜ மேலும் தெரிவித்துள்ளார். (ரெ-16)



# மதுவரித் திணைக்கள அதிகாரிக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்தார் வடக்கு ஆளுநர் சார்ள்ஸ்

யாழ்ப்பாண மாவட்ட மது வரித் திணைக்கள அதிகாரி மீது இன்றைய யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் கடுமையாக நடந்துகொண்டதாகத் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டவிரோதமாக இயங்கும் மதுபானசாலைகள் தொடர்பில் விவாதிக்கப்பட்ட போது, சட்டவிரோத மதுபானசாலைகள் தொடர்பில் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என மதுவரித் திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் ஆளுநர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் இவ்வாறு சட்ட விரோத மதுபானசாலைகளுக்கு மது வரி திணைக்களம் ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானத்தினை இழக்கச் செய்கின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்தோடு அதிகாரிகளும் சீரான நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அதுமட்டுமன்றி இந்தக் கூட்டத்திற்குக் கூட திணைக்களத்திற்குப் பொறுப்பானவர் வருவதில்லை எனவும் உதவி அத்தியட்சகர்தான் ஒவ்வொரு முறையும் இந்தக் கூட்டத்திற்கு வருகின்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்ட விரோத மதுபானசாலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு மது வரித் திணைக்களத்திற்கே உள்ளது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதை நீங்கள் செயல்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த ஆளுநர், அடுத்த முறை நீங்கள் கூட்டத்திற்கு வரும்போது இவ்வளவு காலத்தில் எத்தனை சட்டவிரோத மதுபானசாலைகளைக் கட்டுப்படுத்தி இருக்கிறீர்கள் என்ற விவரத்துடன் வரவேண்டும் எனவும் கடுமையாக எச்சரிக்கையும் விடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)






# 40 பந்துகளில் சதமடித்து மக்ஸ்வெல் சாதனை!

அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் கிளென் மக்ஸ்வெல் உலகக்கிண்ணக் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த பந்துகளில் சதமடித்தவர் என்ற சாதனை யைப் பதிவுசெய்துள்ளார்.

நெதர்லாந்து அணிக்கு எதிராக நேற்று டெல்லியில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணி 309 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமான வெற்றியைப் பெற்றது.

போட்டியின் 40 ஆவது ஓவரின் இரண்டாவது பந்தில் களமிறங்கிய மக்ஸ்வெல் நாற்பதே பந்துகளில் 8 சிக்ஸர்கள் மற்றும் 9 பௌண்டரிகள் அடங்கலாக சதத்தைப் பெற்றிருந்தார்.

இதற்கு முதல் 39 ஆவது ஓவரில் களமிறங்கி தென்னாபிரிக்காவின் ஏ.பி.டி.வில்லியர்ஸ் ஒரு நாள் போட்டிகளில் சதம் அடித்திருந்த சாதனையையும் கிளென் மக்ஸ்வல் முறியடித்துள்ளார்.

உலகக்கிண்ணத்தில் வேகமான சதத்தினை இம்முறை இலங்கை அணிக்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்க வீரர் எய்டன் மர்க்ரம் பெற்றிருந்தார். இவர் 49 பந்துகளில் சதமடித்திருந்த நிலையில் குறித்த சாதனையை மக்ஸ்வெல் முறியடித்துள்ளார்.

இதேவேளை ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பெறப்பட்ட வேகமான சதத்தின் சாதனைக்குரியவராக ஏ.பி.டி.வில்லியர்ஸ் இருக்கிறார். அவர், 2015 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 31 பந்துகளில் சதமடித்திருந்தார்.

# வீடுகளில் பகலில் உணவுகளை திருடி உண்ட சாப்பாட்டுக் கள்வன் வசமாகச் சிக்கினான்

பகல் வேளைகளில் மூடப்பட்டிருந்த வீடுகளுக்குள் புகுந்து சமைத்த உணவை உண்டுவிட்டு பணத்தையும் திருடிச் சென்ற திருடனுக்கு விரித்த வலையில் குறித்த திருடன் வசமாக சிக்கிய சம்பவமொன்று மாத்தலானை பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளதாக நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தலானை பிரதேசத்தில் பகல் வேளைகளில் இவ்வாறு மூடியிருந்த சுமார் பத்து வீடுகளை உடைத்து, குளிர்சாதனப் பெட்டியில் இருந்த சமைத்த உணவு மற்றும் யோகர்ட் போன்றவற்றை அங்கிருந்தே உண்டுவிட்டு, பணத்தையும் திருடிச்சென்ற சம்பவம் தொடர்பில் நிட்டம்புவ பொலிஸாருக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுவந்தன.

நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி நிலந்த, பொலிஸ் பரிசோதகர் அத்துல மெதேவெவ ஆகியோர் அடங்கிய குழுவொன்று இந்த திருட்டு சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த போதிலும் அதில் எவ்வித முன்னேற்றமும் இருக்கவில்லை.

எனவே, இதுகுறித்து வீட்டு உரிமையாளர்கள் நிட்டம்புவ பொலிஸாருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்த நிலையில், கடந்த 21 ஆம் திகதி பிற்பகல் வேளையில் பொலிஸாருக்கு கிடைத்த ஒரு தகவலின்படி, மாத்தலானை பகுதியிலுள்ள குறிப்பிட்ட வீடொன்றைச் சுற்றிவளைத்து பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று சோதனையிட்டபோது அங்கு அந்தத் திருட்டு ஆசாமி உணவைத் திருடி உட்கொண்டு கொண்டிருந்தபோது மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இவர் மாத்தலானை பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடையவர் எனவும், அவர் தனியாகச் சென்றே இவ்வாறு திருட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவரால் திருடப்பட்ட பணம் போதைப்பொருளுக்கு செலவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ரெ-17)



# கிளிநொச்சி மாவட்டத்தில் ஆபத்தான மரங்களை அகற்றும் நடவடிக்கைகள்

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதான வீதியில் ஆபத்தான நிலையில் காணப்பட்ட மரம் ஒன்று அகற்றப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஜீவராஜின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அந்த வீதி ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கான பிரதான மின் விநியோகம், பிரதேசத்துக்கான மின் விநியோகம் இடம்பெறுவதுடன் அதிக மக்கள் பயன்படுத்தும் வீதியாகவும் அது அமைந்துள்ளது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபன கிளிநொச்சி உதவி பிரதேச முகாமையாளர், ஊழியர்கள், மின்சார சபை ஊழியர்கள், இடர் முகாமைத்துவப் பிரிவினர், கரைச்சி பிரதேச சபையினரும் முன்னிலையாகியிருந்த நிலையில் குறித்த மரம் அகற்றப்பட்டது.

கிளிநொச்சி நகரில் மேலும் 29 ஆபத்தான மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்றுவதற்காக அவை அடையாளப்படுத்தப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினர் தெரிவித்துள்ளனர். (04)

JRIDE
BEYOND THE ROAD

# ONLINE TAXI APP FROM JAFFNA

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

+94 21 222 8358

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.10.2023இல் வெளியிடப்பெற்றது.